


பண விஷயம் பேசிவிட்டோம். அடுத்தது என்ன? கட்டமைப்பு. ஆ, ரொம்ப முக்கியம். ஜமா இஸ்லாமியாவின் இருப்பும் செயல்பாடுகளும் தெற்காசியா முழுவதையும் அச்சுறுத்துவதற்கு மிக முக்கியமான காரணம் அதுதான். ஓர் அரசாங்கக் கட்டமைப்பு போன்ற மேல் தோற்றமும், அதற்கு அப்பாற்பட்ட சூட்சுமங்கள் கொண்ட உள்கட்டுமானமும் கொண்டிருப்பதுதான் ஜமாவின் சிறப்பு.

அடித்தட்டுப் போராளிகள் தொடங்கி மேல் மட்டத்துத் தலைவர்கள் வரைக்கும் ஜமா இஸ்லாமியாவில் இருப்போரின் பதவியும் அதன் தன்மையும் முன்வரையறை செய்யப்பட்டவை. மாற்றமில்லாதது. கூடுதல் குறைச்சல் இருக்கும். ஆனால் காரம், வீரியம், மணம், குணம் எல்லாம் அப்படியேதான் இருக்கும்.

இதன் பிரிவுகளை மான்டிகி என்று சொல்வார்கள். ஏகப்பட்ட மான்டிகிகள் உண்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு பணி, ஒவ்வொரு நோக்கம், செயல் திட்டம்.

முதல் பிரிவு (மான்டிகி 1) ஒரு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மாதிரி செயல்படும். எப்போதெல்லாம் இயக்கத்தில் ஆள் பற்றாக்குறை ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் தலைமைச் செயலகத்திலிருந்து இவர்களுக்கு நேரடியாகச் செய்தி வரும். கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கேற்ப, ஆட்களைத் தேர்வு செய்து அனுப்புவதுதான் இவர்களுடைய வேலை. உட்கார்ந்து ஃபைல் பார்க்கும் வேலை என்றால், அதற்குத் தோதான ஆள். பார்க்கச் சாதுவாக இருந்தாலும் பாதகமில்லை. நோஞ்சானாக இருந்தாலும் ஓ.கே.தான். உருப்படியாக கணக்கு, வழக்கு தெரிந்திருந்தால் போதும்.

இயக்கத்தில் ஏற்கெனவே உள்ளவர்களின் சொந்தக்காரர்களுக்கும் நண்பர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். ஆயுதப்பிரிவில் இருக்கும் கமால் முஸ்தபாவின் நண்பன் என்று சொல்லிக் கொண்டு நுழைந்தால் வேலை நிச்சயம். தெரியாத நபர்களைப் பெரும்பாலும் பணியில் அமர்த்துவதில்லை.

இன்னொரு விஷயம். பணிக்குச் சேரும் பெரும்பாலானோருக்குத் தனக்கு சம்பளம் கொடுக்கும் முதலாளி யார் என்று தெரியாது. ஏதோ ஓர் அமைப்பு. இஸ்லாமிய அமைப்பு. நல்ல சம்பளம். நல்ல உபசரிப்பு. ஓரளவுக்குச் சுலபமான வேலை. போதாது?

போராளிகள் அதிகம் தேவை என்னும் பட்சத்தில், தேடல் வேட்டை வேறு மாதிரியாக இருக்கும். ஜோஹோர் பஹ்ரு, கோடா பாரு என்று இரு மலேஷிய நகரங்கள் உள்ளன. ஜமா இஸ்லாமியாவைப் பொறுத்தவரை, இந்த இரு நகரங்களும் பொன் முட்டைகள் இடும் இரண்டு வாத்துகள். குறிப்பாக, இந்த நகரங்களில் உள்ள இரண்டு மதரஸாக்கள். போராளிகளைப் பெரும்பாலும் இங்கிருந்துதான் தேர்ந்தெடுப்பது வழக்கம்.

மான்டிகி 1 பிரிவின் கீழ் மற்றொரு சிறிய குழு செயல்படுகிறது. இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் மேற்படி மதரஸாக்களை எப்போதும் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள். யார் யார்

வருகிறார்கள்? எங்கிருந்து வருகிறார்கள்? அவர்களது குடும்பப் பின்னணி என்ன? ஏழைகளா? வசதி படைத்தவர்களா? இவர்களுள் சிரத்தையுடன் படிப்பவர்கள் எத்தனை பேர்? பஜனை பார்ட்டிகள் எத்தனை பேர்?

விரிவாக ஆராய்வார்கள். துல்லியமாகக் குறிப்பெடுத்துக் கொள்வார்கள். கிடைத்திருக்கும் டேட்டாவை டேபிளில் வைத்து அலசோ அலசென்று அலசித் தீர்ப்பது வெகு முக்கியம். சாதாரண மதப்பற்று உள்ளவர்களை ஒரு பிரிவாகவும், வெறித்தனமான மதப்பற்று உள்ளவர்களை ஒரு பிரிவாகவும் பிரிப்பார்கள். இந்த இரு பிரிவுகளில் வராதவர்கள் அத்தனை பேரும் நிராகரிக்கப்படுவார்கள். அவர்களைக் கண்காணிப்பது நிறுத்தி வைக்கப்படும்.

வெறித்தனமான மதப்பற்று உள்ளவர்களுக்கு முதன்மை இடம். இவர்களை எளிதில் கரைக்க முடியும். தேவைப்பட்டால் வளைக்க முடியும். யார் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று இவர்கள் கருதுகிறார்களோ, அவர்களது பெயரைத் தனியாக எழுதி மான்டிகி 1 தலைமைக்கு அளித்து விடுவார்கள்.

மான்டிகி 1 தலைமைப் பிரிவு அந்தப் பிரதியைத் தன்னுடைய மற்றொரு உட்பிரிவுக்கு அளித்துவிடும். இந்த உட்பிரிவின் வேலை, போதிப்பது. சம்பந்தப்பட்ட நபர்களை ஒன்று திரட்டி அவர்களிடம் பேசுவதுதான் இந்தப் பிரிவின் பணி.

'தோழர்களே, நலமா? நன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்களா? நல்லது. உட்காருங்கள். உங்களை அழைத்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது. இஸ்லாத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். நம் இனம் பேரழிவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. நம் எதிரிகள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். எங்களோடு இணைந்து போராடத் தயாரா? புனிதப் போரில் கலந்துகொள்ளச் சம்மதமா? ஆம் எனில், அனைவரும் வாருங்கள். உடனே, உடனே.'

அன்பொழுகப் பேசுவார்கள். ஆவேசமாகப் பேசுவார்கள். குழைந்து குழைந்து பேசுவார்கள். தேவைப்பட்டால், கண்ணீர் சிந்திக்கொண்டே உருக்கமாகப் பேசுவர்கள். பத்துப் பேரில் எட்டுப் பேர் உடனடியாக இணைந்து கொள்வார்கள். மீதி இரண்டு பேர் மறுநாள் காலை பல் தேய்த்துவிட்டு வந்து சேர்ந்து கொள்வார்கள்.

தேவைப்படும் எண்ணிக்கைக்கு ஏற்பப் போராளிகள் சேர்ந்த பின்பு, அவர்களை மீண்டும் அழைத்துப் பேசுவார்கள். இறுதியாக, 'உடன்பிறந்தவர்களே, உங்களுக்குக் கொடுக்கப்படும் பணி மிக மிக அபாயகரமானது. புனிதப் போரில் உயிர் இழப்பு ஏற்படுவது இயல்பு. அனைவரும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.'

அடுத்து, யார் யார் என்னென்ன செய்யவேண்டும் என்று விலாவரியாக எடுத்துச் சொல்வார்கள். எந்தெந்தப் பிராந்தியத்துக்கு யார் யார் செல்ல வேண்டும் என்று சொல்வார்கள். ஆக, ஆட்கள் சேர்க்கும் பணி அங்கே முடிகிறது.

மான்டிகி 1 பிரிவில் மொத்தம் இருநூறு பேர் இருப்பார்கள். ஜமா இஸ்லாமியாவின் மிகப் பெரிய பிரிவு இதுதான். ஆட்கள்தான் இயக்கத்தின் முதுகெலும்பு என்பதால், மான்டிகி 1 குழுவில் உள்ள உயர் அதிகாரிகளின் முடிவுகளுக்கு ஒட்டுமொத்த ஜமா இஸ்லாமியாவும் மறுபேச்சின்றி கட்டுப்படும். மலேஷியாவில் மட்டும் மொத்தம் நூறு மான்டிகி குழு நபர்கள், வெவ்வேறு பகுதிகளில் சிதறி ரகசியமாகப் பணியாற்றுவது வழக்கம்.

அடுத்து மான்டிகி 2. அபு பக்கர் பஷீரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பிரிவு இது. இந்தப் பிரிவின் வலிமை நூறு பேர். இவர்களுடைய பணி இன்னும் விரிவானது. ஒரு சுதந்திர இஸ்லாமிய தேசத்தை நிறுவவேண்டும் என்பதுதான் பொதுவான பெரிய கனவு. இந்தக் கனவு எப்போது நிறைவேறும் என்று ஒருவருக்கும் தெரியாது. இது சாத்தியமா? சாத்தியமில்லையா?

என்று கூடத் தெரியாது. ஒரு கனவு. அவ்வளவுதான்.

ஆனால், அந்தக் கனவை அவர்கள் நேசித்தார்கள். ஆகப் பெரிய லட்சியம் ஒன்று இருந்தால்தானே ஓர் இயக்கம் வலுப்பெறும்? அப்போது தானே மும்முரமாக வேலை நடக்கும்? அதற்காகத்தான் இந்தப் பிரிவு.

ஆயுதம் தாங்கிய பலர், இந்தப் பிரிவில் வளைய வருவார்கள். தேவைப்பட்டால் மான்டிகி 1 பிரிவுக்குப் பணிவிடைகள் செய்வார்கள்.

அடுத்து மான்டிகி 3. ஜமா இஸ்லாமியாவின் நம்பிக்கை நட்சத்திங்கள் பலர் ஜொலிக்கும் பிரிவு இது. ஆயுதங்கள் எங்கிருந்தாலும், அவற்றைத் தருவிப்பது இவர்களுடைய வேலை. என்னென்ன ஆயுதங்கள் வேண்டும் என்று ஒரு லிஸ்ட்டை மட்டும் இவர்களுக்கு அனுப்பி விட்டால் போதும். தலையை அடமானம் வைத்தாவது கொண்டு வந்து இறக்கி விடுவார்கள். கேப் வெடி, ஆயிரம் வாலா தொடங்கி வீரியமுள்ள வெடிகுண்டுகள் வரை அத்தனையும் இவர்கள் வசம்.

இந்தப் பிரிவின் தலைவர் ஃபதூர் ரஹ்மான் அல் கோஸி. பிறந்தது இந்தோனேஷியாவில். பிறகு, அங்கிருந்து பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தார். அங்கேயே ஒரு மதரஸாவில் இணைந்து படித்தார். பிறகு, ஜமாவுக்கு வந்துவிட்டார். இவருடைய பிரத்தியேகத் திறமைகளைக் கண்டு வியந்த ஜமா இஸ்லாமியா உயர் குழு, இவருக்குப் பல புரமோஷன்களைக் கொடுத்து, இறுதியாக மான்டிகி 3 பிரிவின் தலைவராக நியமித்தது.

இருப்பதிலேயே மிகவும் சிறிய பிரிவு மான்டிகி 4. அதிகம் வளர்ச்சி காணாத ஒரு பிரிவும் கூட. மான்டிகி 1, 2, 3 ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் சிறுசிறு எடுபிடி வேலைகள் செய்யும் பணியைத் தவிர, பெரிதாக எந்தப் பொறுப்பும் இந்தப் பிரிவினருக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

நிர்வாக வசதிக்காகத்தான் இத்தனை பிரிவுகளே தவிர, பெரும்பாலும் எல்லோரும் ஒன்றாக இணைந்தே செயல்படுவார்கள். ஜமா இஸ்லாமியா தலைமை அடிக்கடி மீட்டிங் போட்டு அனைவரையும் ஒன்று திரட்டி பிரசங்கங்கள் செய்வது வழக்கம். அத்தனை பிரிவுகளையும் சேர்ந்த உயர் மட்ட ஆட்கள் ஒன்று கூடுவார்கள். இதுவரை என்ன செய்திருக்கிறோம், அடுத்து என்ன செய்யப் போகிறோம், எப்படிச் செய்யப் போகிறோம் என்று உட்கார்ந்து பேசுவார்கள். பெரிய பெரிய கார்ப்பரேட் கம்பெனிகள் நடத்தும் ஆடம்பரமான வருடாந்திர மீட்டிங்குகளைப் போலத்தான் இவர்களுடைய மீட்டிங்கும் நடைபெறும்.

திரும்பத் திரும்ப இவர்கள் மீட்டிங் போடுவதற்கும் திரும்பத் திரும்ப தமது கொள்கைகளை எடுத்துச் சொல்வதற்கும் ஒரு காரணம் உண்டு.

நம்பிக்கை. இயக்கத்தில் உள்ள அத்தனை பேரும் நம்பிக்கையுடன், ஒழுக்கத்துடன் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் இயக்கம் வளரும். அத்தனை கனவுகளையும் நனவாக்க முடியும்.

இயக்கத்தினரிடையே எப்படி நம்பிக்கையை ஏற்படுத்துவது? வெவ்வேறு பிரிவுகளில் வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கும் அவர்களை எப்படி ஒரே குடையின் கீழ் இணைப்பது? யோசித்து ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள்.

திருமணம்.

பொதுவாக, தீவிரவாத இயக்கங்கள் இறுக்கமான சூழலில்தான் வளரும். ஜமா இஸ்லாமியாவும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆயுதங்கள் சேர்க்க வேண்டும். ஆட்கள் சேர்க்க வேண்டும். தெளிவான செயல் திட்டங்கள் தீட்ட வேண்டும். லட்சியத்தையும் கைவிட்டுவிடக் கூடாது. இறுக்கம் இருக்கத்தானே செய்யும்? இந்த இறுக்கத்தைத்தான் உடைக்க விரும்பியது ஜமா இஸ்லாமியா.

மீட்டிங் போட்டுப் பேசினார்கள். 'போராளிச் செல்வங்களே, உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளை நீங்கள் அனைவரும் மிகத் திறமையாக நிறைவேற்றுகிறீர்கள். மகிழ்ச்சி. எந்நேரமும் ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கும் நீங்கள் வாழ்வின் சில மகிழ்ச்சிகரமான பக்கங்களையும் பார்க்கலாம், தப்பில்லை. மகிழ்ச்சியும் முக்கியம்தான். இல்லையா? ஒன்று செய்யுங்கள். திருமணம் ஆகாத அத்தனை பேரும் உடனடியாகத் திருமணம் செய்துகொள்ளுங்கள்.'

போராளிகள் எழுந்து நின்றனர்.

'எங்களுக்கு யார் பெண் தருவார்கள்? தவிரவும், ரகசியமாக இயங்க வேண்டிய நாங்கள் எப்படி திருமண பந்தத்தில் ஈடுபடுவது?'

'நியாயமான கேள்விதான். ஆனால், அதற்கு ஒரு வழி இருக்கிறது. உங்களுக்குள்ளே பெண் கொடுத்து, பெண் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் சகோதரியை, உங்கள் நண்பருக்கு மணமுடியுங்கள். நண்பரின் சித்தி மகளை நீங்கள் மணந்து கொள்ளுங்கள். உறவுப் பெண்கள் யார் இருந்தாலும் இயக்கத்தின் உறுப்பினர்களுக்குப் பொருத்தம் பாருங்கள். அத்தனை பேரும் இப்படியே செய்யலாம், தப்பில்லை.'

அவர்கள் திகைத்து விட்டார்கள். அட! என்ன ஓர் அருமையான வழி. மகிழ்ச்சியுடன் அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

அடுத்தடுத்த மாதங்களில், ஜமா இஸ்லாமியாவில் ஒரே திருமண வைபோகம்தான்.

இயக்கத்தினர் அனைவரும் சிலாகித்துப் பேசிக் கொண்டார்கள். 'பார்த்தாயா, நமக்காக, நம்முடைய மகிழ்ச்சிக்காக நம் தலைமை எத்தனை சிரத்தையுடன் பாடுபடுகிறது! ஆயிரம் சொன்னாலும் ஜமா, ஜமாதான்!'

ஆனால், ஒன்றை மறந்துவிட்டார்கள். திருமணம் உள்ளிட்ட எந்த ஒரு சொந்த விவகாரத்தையும் விடுமுறைக்கால கொண்டாட்டமாகத்தான், ஜமா இஸ்லாமியாவின் தலைமை நினைத்தது. பணிக் காலத்தில் செய்ய வேறு பல ஜோலிகளை வைத்திருந்தார்கள்.

அவை பெரும்பாலும் பதற வைக்கும் ஜோலிகள்!